புண்யாஹவாசனத்திற்கு தேவையான சாமான்கள்:



மஞ்சள் பொடி
மாவிலைக்கொத்து
தேங்காய்
வாழை நுனி இலை - 4
அரிசி - 2 கிலோ
நெல் - 2 கிலோ
வெத்திலை, பாக்கு
பழம்
புஷ்பம்
சந்தனம், குங்குமம்,

சோபன (மஞ்சள்) அக்ஷதை
வெள்ளிச்சொம்பு
குளபாத்திரம் (ராமானுஜம்)
மஞ்சள் கும்ப வஸ்த்ரம்
ஆசமன பாத்திரம்
மணைகள்

கை கால் சுத்தம் செய்து இரு முறை ஆசமனம் பண்ணி படியில் கிழக்கு முகமாக உட்கார்ந்து இரண்டு இலைகளைக் கிழக்குமுகமாகப் போட்டு அதன்மேல் அரிசியைப் பரப்பி அதன்மேல் சில தர்ப்பங்களை ஆசமனமாகப் போட்டு அதன்மேல் தீர்த்தம் நிறம்பிய வெள்ளிச்சொம்பினை நடுவில் வைத்து சொம்பினுள் மாவிலைகளைக் கொத்தாக வைத்து அதன்மேல் மஞ்சள் படுத்தியோ படுத்தாமலோ தேங்காயை வைத்து அதன்மேல் சிறிது புஷ்பம் வைத்து சொம்பின் நான்கு புறத்திலும் சந்தனம் வைத்து அதன்மேல் சிறிது அக்ஷதையையும் இடவேண்டியது.

இரண்டு பில்லால் பண்ணப்பட்டு பவித்திரத்தைப் போட்டுக்கொண்டு இரண்டு தர்ப்பங்களை ஆசனமாகப் போட்டுக்கொண்டு இரண்டு தர்பங்களைப் பவித்திரத்துடன் இடுக்கிக்கொண்டு ப்ராணாயாமம் பண்ணவேண்டியது. முன்னர் அஸ்மத் குருப்யோ நம:, சுக்லாம்பரதரம் இவை ஆரம்பித்து சொல்லாவிட்டால் அதிலிருந்து ஆரம்பித்துச் சொல்லவேண்டியது. அல்லது அத்ய பூர்வோக்த ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம் ———— சுப திதௌ ஸ்ரீபகவதாஜ்ஞயா————ம்
"மம ச்ரௌத ஸ்மார்த்த விதிவிஹித நித்யாநுஷ்டாந யோக்யதா ஸித்யர்த்தம் ப்ரஹ்ம தேஜ: அபிவ்ருத்தியர்த்தம் யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே." என்று ஸங்கல்பித்துக்கொண்டு இடுக்குப்பில் வடக்கே போட்டு.
தலையைத் தொட்டு - "யஜ்ஞோபவீத தாரண மந்த்ரஸ்ய ப்ரஹ்மா ருஷி:"
மூக்கைத்தொட்டு "அநுஷ்டுப் சந்த:"
மார்பைத் தொட்டு "த்ரயீ வித்யா தேவதா - யஜ்ஞோபவீத தாரணே விநியோக:"
என்று ந்யாஸம் பண்ணி, வலது கை மேலே பார்க்க பூணலை ப்ரஹ்ம முடிச்சு கட்டைவிரல் பக்கம் வைத்து - இடது கையால் பூணலின் அடிப்பாகத்தை பிடித்துக்கொண்டு குந்தி உட்கார்ந்து,
"யஜ்ஞோபவீதம் - பரமம் - பவித்ரம் - ப்ரஸாபதே: - யத்ஸஹஜம் - புரஸ்தாத் - ஆயுஷ்யம் - அக்ரியம் - ப்ரதிமுஞ்சசுப்ரம் - யஜ்ஞேபவீதம் - பலமஸ்து தேஜ:" என்று போட்டுக்கொண்டு, பவித்ரம் காதில் வைத்து ஆசமனம் பண்ணி,
பவித்ரம் போட்டுகொண்டு ப்ராணாயாமம் பண்ணி,
"ஸ்ரீபகவதாஜ்ஞயா —— ம் க்ருஹஸ்த ஆச்ரமார்த்த் த்விதீய யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே" என்று ஸங்கல்பித்து,
மீண்டும் முன்போல்
தலையைத் தொட்டு - "யஜ்ஞோபவீத தாரண மந்த்ரஸ்ய ப்ரஹ்மா ருஷி:"
மூக்கைத்தொட்டு "அநுஷ்டுப் சந்த:"
மார்பைத் தொட்டு "த்ரயீ வித்யா தேவதா - யஜ்ஞோபவீத தாரணே விநியோக:"
என்று ந்யாஸம் பண்ணி, வலது கை மேலே பார்க்க பூணலை ப்ரஹ்ம முடிச்சு கட்டைவிரல் பக்கம் வைத்து - இடது கையால் பூணலின் அடிப்பாகத்தை பிடித்துக்கொண்டு குந்தி உட்கார்ந்து,
"யஜ்ஞோபவீதம் - பரமம் - பவித்ரம் - ப்ரஸாபதே: - யத்ஸஹஜம் - புரஸ்தாத் - ஆயுஷ்யம் - அக்ரியம் - ப்ரதிமுஞ்சசுப்ரம் - யஜ்ஞேபவீதம் - பலமஸ்து தேஜ:" என்று போட்டுக்கொண்டு, பவித்ரம் காதில் வைத்து ஆசமனம் பண்ணவேண்டும்.
பின் மீண்டும் பவித்ரம் தரித்துப்ராணாயாமம்.
"அத்ய பூர்வோக்த ஏவங்குண விசேஷண விசிஷ்டாயாம் ——. அஸ்யாம் சுப திதௌ, ஸ்ரீபகவதாஜ்ஞயா —— ம்
அஸ்மின்னு க்ருஹ சுத்யர்த்தம் ஸ்தல சுத்யர்த்தம் பாண்ட சுத்யர்த்தம் கூப சுத்யர்த்தம் மம சரீர சுத்யர்த்தம் (உடன்பிறந்தோர் இருந்தால் மம ப்ராத்ரூணாம்ஞ்ச சரீர சுத்யர்த்தம்) ப்ரஸூதிகாயாம் சரீர சுத்யர்த்தம். ப்ரஸூதிகாயாம் பாண்ட சுத்யர்த்தம், ப்ரஸூதிகாயாம் த்ரவ்ய சுத்யர்த்தம், ப்ரஸூதிகாயாம் உபகரண சுத்தியர்த்தம், ப்ரஸூதிகாயாம் பாண்ட சுத்யர்த்தம், கூப சுத்யர்த்தம் ஸர்வோபகரண சுத்யர்த்தம் சுத்தியர்த்த புண்யாஹவாசனம் கரிஷ்யே." என்று ஸங்கல்பித்துக்கொள்ளவேண்டும்.

(பெரும்பாலும் ப்ரதிவசனம் சொல்லத் தெரிந்த ஸ்வாமிகள் அருகில் இருப்பது துர்லபமான காலமாகி விட்டபடியால் ப்ரதிவசனங்கள் முடிந்தவரைத் தவிர்க்கப்படுகிறது. வாத்யார் மனதிற்குள் அல்லது முணுமுணுத்தபடி ப்ரதிவசனங்களைச் சொல்லவும்)
ஸ்வாமிந: மந: ஸமாதீயதாம்
ப்ரஸீதந்து பவந்த: பவத்பி: அநுஜ்ஞாத: புண்யாஹம் வாசயிஷ்யே
சுத்தி புண்யாகம் பவந்தோப்ருவந்து
புண்யாஹே ஸ்வஸ்தி பவந்து: ப்ருவந்து
புண்யாஹே ருத்திம் பவந்த: ப்ருவந்து
ருத்தி ஸம்ருத்தி: சுபம் கர்மாஸ்து
ப்ராஜாபதி: ப்ரீயதாம்
பகவான் ப்ரஜாபதி:
(பின்வரும் மந்திரங்களைச் சொல்லும் போது ஒவ்வொரு மந்திரத்திற்கும் கும்பதிலிருந்து மாவிலையால் தீர்த்தம் எடுத்து ஒரு தொன்னை அல்லது வட்டிலில் சிறிது சிறிதாகச் சேர்த்துக்கொண்டு வந்து கடைசியில் சாந்தி: என்று மூன்று தரம் சொல்லி முடியும்போது மீண்டும் இந்த ஜலத்தைக் கும்பத்தினுள் இரண்டு கைகளாலும் சேர்த்துவிடவேண்டியது.)
ஓம்
சாந்தி: அஸ்து
துஷ்டி:
புஷ்டி:
ருத்தி:
அவிக்நம்
ஆயுஷ்யம்
ஆரோக்யம்
தநதாந்ய ஸம்ருத்தி:
கோ ப்ராமஹணேப்ய: சுபம் பவது
அரிஷ்ட நிரசனம்
யத்பாபம் தத் ப்ரதிஹதம்
சர்வசோபனம் அஸ்து
சர்வா: ஸம்பத: ஸந்து
ஓம் சாந்தி சாந்தி சாந்தி:
(தீர்த்தத்தைக் கும்பத்தில் சேர்த்துவிடவேண்டியது)
ஒரு வேளை தேங்காய் மாவிலைக்கொத்து எடுத்து வெளியில் வைத்திருந்தால் மீண்டும் இவற்றை முன்போல் கும்பத்தில் வைத்துவிட்டு 7அல்லது 11 அல்லது 21 தர்பங்களால் பண்ணப்பட்ட கூர்ச்சத்தை கும்பத்தினுள் வடக்குப்பக்கமாக நுனி வெளியில் இருக்கும்படி வைக்கவேண்டிது.
கையில் கொஞ்சம் அக்ஷதை எடுத்துக்கொண்டு
இமம்மே வருணா ச்ருதீஹவம்ம்ம் அத்யாச்சம்ருடயா துவாம் அவச்யு: ஆசகே தத்வாயாமி ப்ருஹ்மணா வந்தமான:
தது ஆசாஸ்தே யஜமான: ஹவிர்பி: அஹேடமான: வருணா இஹபோதி உருசகும்மான: ஆயு: ப்ரமோக்ஷீ:
என்ற மந்திரத்தைச் சொல்லி கும்பத்தில் அக்ஷதையைச் சேர்த்து
அஸ்மின் கும்பே பகவந்தம் ஸகல தீர்த்தாதிபதிம், புண்டரீகாக்ஷம் வருணம் த்யாயாமி ஆவாஹயாமி என்று சொல்லவேண்டியது.
வருணாய நம:
(பின் வருவனவற்றுள் தீர்த்த உபசாரங்களுக்கு கூர்சத்தால் தீர்த்தம் எடுத்து கும்பத்திற்கு காட்டி, அருகில் உள்ள கிண்ணத்திலோ தரையிலோ விடவேண்டியது. வஸ்த்ரம், தீபம், தூபம், ஆபரணம், அலங்காரம் போன்ற மற்ற உபசாரங்களுக்கு கும்பத்தில் அக்ஷதை சேர்க்கவேண்டியது)
ஆஸனம் ஸமர்ப்பயாமி
இதம் அர்க்யம் ஸமர்ப்பயாமி
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி
அக்ஷதாள் ஸமர்ப்பயாமி
கந்தான் தாராயாமி
புஷ்பாணி ஸமர்ப்பயாமி
தூப தீபார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி
ஆபரணார்த்தம் அலங்காரார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி
வஸ்த்ரார்த்தம் உபவீதார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி
ஸமஸ்த உபசாரார்த்தாம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி
அருகிலுள்ள வெத்திலை பாக்கு பழங்களை கூ்ர்ச்சத்தால் ப்ரோக்ஷித்து அமுது செய்து வைக்கவேண்டியது.
ஓம் பூர்புவஸ்ஸுவ: என்று ப்ரோக்ஷித்து
ப்ரோக்ஷித்து

தத்ஸவிதுர்வரேண்யம் ப்ர்கோ தேவஸ்யதீமஹி த்யோயோந: ப்ரசோதயாத் என்று அபிமந்திரித்து
தேவஸவித: ப்ரசுவா என்று தீர்த்தத்தால் ப்ரதக்ஷிணமாக சுற்றி விட்டு
அம்ருத உபஸ்தரணமஸி என்று தீர்த்தம் எடுத்து கும்பத்திற்கு காமித்து அருகிலுள்ள பாத்திரத்தில் அல்லது தரையில் விடவேண்டியது.
பழங்களை கிள்ளியோ (அப்படியே பூர்ணமாகவோ) க்ராஸ முத்திரையினால் ப்ராணாஹுதிகள் சொல்லி அமுது பண்ணி வைக்கவேண்டியது.
ஓம் ப்ராணாய ஸ்வாஹா
ஓம் அபாநாய ஸ்வாஹா
ஓம் வ்யாநாய ஸ்வாஹா
ஓம் உதாநாய ஸ்வாஹா
ஓம் ஸமாநாய ஸ்வாஹா
ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா
ப்ரஹ்மணிமே ஆத்மா அம்ருதத்வாயா
வருணாய நம: கதலீ பலம் நிவேதயாமி
அம்ருதாபிதானமஸி
ஆசமனீயம் ஸமர்ப்பயாமி
பானீயம் ஸமர்ப்பயாமி
கற்பூர தாம்பூலம் ஸமர்ப்பயாமி
ஸவர்ணபுஷ்பம் ஸமர்ப்பயாமி
மந்த்ர புஷ்பம் ஸமர்பயாமி
ஸமஸ்த உபசாரார்த்தம் அக்ஷதாநு ஸமர்ப்பயாமி
அருகில் புண்யாஹம் ஜபிக்க வைதீகாள் இருந்தால் (இல்லாவிட்டாலும்) கொஞ்சம்அக்ஷதையை எடுத்து அவர்கள் மேல் படும்படி புண்யாஹவாசன ஜபகர்மணி ஸர்வேப்ய: ஸ்ரீவைஷ்ணவேப்யோ நம: என்றுஇறைக்கவேண்டியது.

புண்யாஹ ஜபம்:
ஓம் ததிக்ரவிண்யோ அகாரிஷம்
ஜிஷ்ணோரஸ்வஸ்ய வாஜிந:
ஸுரபிநோமுகாகரது
ப்ரண ஆயூகும்ஷி தாரிஷது
ஆபோஹிஷ்டா மயோபுவ:
தானஊர்ஜே ததாந
மஹரணாய சக்ஷஸே
யோவ: சிவதமோரஸ:
தஸ்யபாஜயதேஹந:
உசதீரிவமாதர:
தஸ்மா அரங்கமாமவ:
யஸ்யக்ஷயாய ஜிந்வத
ஆபோஜனயதாசன:
பாவமான ஸுக்தம்:
ஓம் ஹிரண்யவர்ணா சுசயபாவகா யாஸுஜாத: | கஸ்யபோயாஸ்விந்த்ர: அக்நிய்யா கர்பந்ததிரே விரூபாஸ்தாந ஆபஸ்ஸக்குஸ்யோநாபவந்து | யாஸாகும்ராஜா வருணோயாதிமத்யே ஸத்யாந்ருதே அவபஸ்யந்ஜநாநாம் மதுச்சுதசுசயோ யா: பாவகாஸ்தாந ஆபஸ்யக்குஸ்யோநாபவந்து, யஸாந்தேவா திவிக்ருண்வந்திபக்ஷம் யாஅந்தரிக்ஷே பஹுதாபவந்தி யா: ப்ருதிவீம் பயஸோந்தந்தி சுக்ராஸ்தாந ஆபஸ்சக்குஸ்யோநாபவந்து| சிவேநமா சக்ஷுஷாபஸ்யதாபஸ்சிவயாதநுவோபஸ்ப்ருத த்வசம்மே ஸர்வாகும்அக்நீகும் ரப்ஸ்ஷுஷதோ ஹுவேவோ மயிவர்சோ பலமோஜோ நிதத்தா|

பவமாந:ஸுவர்ச்சந:| பவித்ரேண விசர்ஷணி: | ய:போதாஸபுநாதுமா புநந்துமாதேவஜநா: | புநந்துமநவோதியா புநந்துவிச்வஆயவ: | ஜாதவேத: பவித்ரது| பவித்ரேணபுநாஹிமா | சுக்ரேணதேவதீத்யது | அக்நேக்ரக்வாக்ரதூகும்ரநூ| யத்தேபவித்ரமர்ச்சிஷி | அக்நேவிததமந்தரா | ப்ரஹ்மதேநபுநீமஹே | உபாப்யாம் தேவஸவித: | பவித்ரேணஸவேநசா | இதம்ப்ரஹ்ம புநீம ஹே வைஸ்வதேவீ புநதீதேவ்யாகாது யஸ்யைபஹ்வீஸ்தநுவோவீதப்ருஷ்டா:| தயா மதந்தஸ்ஸதமாதயேஷு வயக்குஸ்யாமபதயோரயீணாம் | வைஸ்வாநரோரஸ்மிபிர்மாபுநாது| வாத:ப்ராணேநேஷிரோமயோபூ: | த்யாவாப்ருதிவீபயஸாபயோபி:| ருதாவரீயஜ்ஞியேமாபுநீதாம் | ப்ருஹத்பிர்ஸவிதஸ்த்ருபி: அக்நேதகைஷ:புநாஹிமா | யேநதேவாஅபுநதா | யேநாபோதிவ்யங்கச: | தேநதிவ்யேநப்ரஹ்மணா | இதம்ப்ரஹ்மபுநீமஹே | ய:பாவமாநீ ரத்யேதி| ருஷிபிஸ்ஸம்ப்ருதகும்ரஸம்ம்ம் | தஸ்மைஸரஸ்வதீதுஹே | க்ஷீரகும் ஸர்பிர்மதூதகம்| பாவமாநீஸ்ஸ்வஸ்த்யயநீ:| ஸுதுகாஹி பயஸ்வதீ: | ருஷிபிஸ்ஸம்ப்ருதோரஸ :| ப்ராஹ்மணேஷ்வம்ருதகும்ஹிதம் பாவமாநீர்திசந்துந:| இமல்லோகமதோஅமும்:| காமாந்த்ஸமர்த்தயந்துந:| தேவீர்தேவைஸ்ஸமாப்ருதா: | பாவமாநீஸ்ஸ்வஸ்தயநீ: | ஸுதுகாஹி பயஸ்வதீ: ருஷிபிஸ்ஸம்ப்ருதோ ரஸ: ப்ராஹ்மணேஷ்வம்ருதகும்ஹிதம் பாவமாநீர்திசந்துந: இமல்லோகமதோஅமும்

காமாந்ஸமர்தயந்துந்:தேவீர்தேவைஸ்ஸமாப்ருதர்: பாவமாநஸ்ஸ்வஸ்தயநீ: ஸுதுகாஹீ க்ருதஸ்சுது: | ருஷிபிஸ்ஸம்ப்ருதோரஸ:| ப்ராஹ்மணேஷ்வம்ருதகும்ஹிதம் | யேநதேவா பவித்ரேணா | ஆத்மாநம்புநதேஸதா | தேநஸஹஸ்ரதாரேணா | பாவமாந்ய: புநந்துமா | ப்ராஜபத்யம்பவித்ரம்ம்ம் | ஸதோத்யாமகும்ஹிரண்மயம்ம்ம் | தேநப்ரஹ்மவிதோவயம் | பூதம்ப்ரஹ்மபுநீமஹே | இந்த்ரஸ்ஸ ஙீதிஸஹமாபுநாது | ஸோமஸ்ஸ்வஸ்த்யா வருணஸ்ஸமீச்யாஆ | யமோராஜாஆ ப்ரம்ருணாபி: புநாதுமா | ஜாதவேதாமோர்ச்சயந்த்யாபுநாது|

பூர்புவஸ்ஸுவ:| தச்சம்ய்யோராவ்ருணீமஹே | காதும்ய்யஜ்ஞாயா | காதும்ய்யஜ்ஞபதயே | தைவீஸ்ஸ்வஸ்திரஸ்துந: | ஸ்வஸ்திர்மாநுஷேப்ய: | ஊர்த்வந்ஜிகாதுபேஷஜம் | சந்நோஅஸ்துத்விபதே:| சந்சதுஷ்பதே | ஓம்சாந்தி:சாந்தி: சாந்தி:|

(ஜபம் ஆனந்தம்) சிறிது அக்ஷதையைக் கையில் எடுத்துக்கொண்டு
தத்வாயாமி ப்ரஹ்மணா வந்தமாந: தது ஆசாஸ்தே யஜமாந: ஹவிர்பி: அஹேடமாந: வருணா இஹபோதி உருசகும்ச மாந: ஆயு: ப்ரமோஷீ:
என்று சொல்லி அக்ஷதையைக் கும்பத்தில் சேர்த்து அஸ்மாது கும்பாது பகவந்தம் வருணம் யதாசுகம் யதாஸ்தாநம் ப்ரதிஷ்டாபயாமி என்று சொல்லவேண்டியது.
கும்பத்தின் மீதுள்ள தேங்காயை எடுத்து அருகில் வைத்துவிட்டு மாவிலையினால் தீர்த்தம் எடுத்து பெரியவாளைக்கொண்டு பின்வரும் மந்திரங்களினால் ப்ரோக்ஷித்துக்கொள்ளவேண்டியது.
தேவஸ்யத்வா ஸவிது: ப்ரசவே அஸ்விநோர்பாஹுப்யாம் பூஷ்ணோஹஸ்தாப்யாம்| அஸ்விநோர்பைஷஜ்யேநா தேஜஸே ப்ரஹ்மவர்ச்சஸா யாபிஷிந்ஜாமி| தேவஸ்யத்வா ஸவிது:ப்ரசவே அஸ்விநோர்பாஹுப்யாம் பூஷ்ணோஹஸ்தாப்யாம் இந்த்ரஸ்யேந்த்ரியேணா ச்ரியை யசஸேபலாயாபிஷிந்ஜாமி | தேவாஸ்த்வேந்த்ரஜ்யேஷ்டா வருணாராஜாநோ அதஸ்தாசோபரிஷ்டாச்சபாந்துநவா ஏதேநபூ தோநமேத்யோ நப்ரோக்ஷிதோ யதேநமதப்ராசீனம் ப்ரோக்ஷதி யத்ஸந்சிதமாஜ்யேந ப்ரோக்ஷதி தேநபூதஸ்தேநமேத்யஸ்தேநப்ரோக்ஷித: த்ருபதாதிவேந்முமுசாந: | ஸ்விந்நஸ்ஸாத்வீ மலாதிவா | பூதம்பவித்ரேணேவாஜ்யம் | ஆபஸ்ஸுந்தந்து மைநஸ:| பூர்புவஸ்ஸுவோ, பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவ:|



த்ரவ்யங்கள் மற்றும் இடங்களை (அறைகளைப்) ப்ரோக்ஷிக்க மந்த்ரம்:
வாஸ்தோஷ்பதே ப்ரதிஜாநீ ஹ்யஸ்மாந் ஸ்வாவேஷோ அநமீவோ பவாந:
யத்வேமஹே ப்ரதிதந்நோ ஜுஷஸ்வ சந்நயேதி துவிபதே ஸந்சதுஷ்பதே

வாஸ்தோஷ்பதே சக்மயா சகும் சதாதே சக்ஷீமஹீரண்வயா காதுமத்யா
ஆவ: ஆக்ஷேமே உதயோகேவரந்நோ யூயம்பாத: ஸ்வஸ்திபி: ஸதாந:

வாஸ்தோஷ்பதே ப்ரதரணோநயேதி கோபிரஸ்வேப்ரிந்தோ அஜராஸ்சஸ்தே
ஸக்யேஸ்யாம பிதேவபுத்ராநு ப்ரதிநோஜுஷஸ்வா

அமீவ: வாஷ்தோஷ்பதே விச்வாரூபாண்யாவிசந்நு ஸகா
ஸீசேவஏதிந: சிவகும் சிவம்.

பூர்புவஸ்ஸுவோ பூர்புவஸ்ஸுவோ பூ:ஃபுவஸ்ஸுவ:|

புண்ணியாகவாசனம் ஆகி, தன்னையும் ப்ரஸவித்த ஸ்திரீ, குழந்தை, க்ரஹம் முதலியவைகளை புண்ணியாகவாசன ஜலத்தால் ப்ரோக்ஷித்த பிறகு பீஜதான அநுஜ்ஞை.

"ஓம் நமஸதஸே ஆரம்பித்து, ஸ்வீக்ருத்ய வரையில் சொல்லி, நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய (பெண் குழந்தையாக இருந்தால் ஜாதாயா:, மம என்று சொல்லச் சொல்லி) சிசோ: தந்மாதா பித்ரோச்ச மாதுலஸ்ய மாதாமஹாதீனாம்ச க்ஷேம ஸ்தைர்ய, வீர்ய விஜய, ஆயுராரோக்ய அபிவ்ருத்யர்த்தம் ஸர்வாரிஷ்ட சாந்தியர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்யர்த்தம் ஸமஸ்த ரோகபீடா பரிஹாரார்த்தம் சதாயு: ஸம்பூர்ணதா ஸித்யார்த்தம் வேதோக்த ஆயுர்அபிவிருத்தியர்த்தம் ஏபி: ஸ்ரீவைஷ்ணவைஸ்ஸஹ யத்கிஞ்சிது ஹிரண்ய ஸஹித பீஜதானம் கர்த்தம் யோக்கியதா ஸித்திம் அனுக்ரஹாணா" என்று அநுஜ்ஞை ஸமர்ப்பித்து,
ப்ரதி வசனம்: "ததாஸ்து யோக்கியதாஸித்திரஸ்து" என்று ப்ரதிவசனம் பெற்று,
படியில் உட்கார்ந்து கொண்டு, விஷ்வக்ஸேன ஆராதனம் செய்து
"ஸ்ரீ கோவிந்தேத்யாதி ஆரம்பித்து ஸ்ரீபகதாஜ்ஞயா ...... ...... ம் நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய (பெண் குழந்தையாக இருந்தால் ஜாதாயா:, மம என்று சொல்லச் சொல்லி) சிசோ: தந்மாதா பித்ரோச்ச மாதுலஸ்ய மாதாமஹாதீனாம்ச க்ஷேம ஸ்தைர்ய, வீர்ய விஜய, ஆயுராரோக்ய அபிவ்ருத்யர்த்தம் ஸர்வாரிஷ்ட சாந்தியர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்யர்த்தம் ஸமஸ்த ரோகபீடா பரிஹாரார்த்தம் சதாயு: ஸம்பூர்ணதா ஸித்யார்த்தம் வேதோக்த ஆயுர்அபிவிருத்தியர்த்தம் ஏபி: ஸ்ரீவைஷ்ணவைஸ்ஸஹ

யத்கிஞ்சிது ஹிரண்ய ஸஹித பீஜதானம் ( கடைசீ வாக்கியம் "பீஜாதானம் கரிஷ்யே" 2 ஆவர்த்தி) என்று ஸங்கல்பம் செய்து இடுக்கு தர்ப்பத்தை வடக்கே சேர்க்கவும்.

விஷ்வக்ஸேனரை யதாஸ்தானம் செய்து, பவித்ரம் காதில் வைக்கச் சொல்லி சந்தனம் கொடுத்து, புஷ்பம் கொடுத்து சிரசில் வைத்துக்கொள்ளச் சொல்லி, அக்ஷதை கொடுத்து பெரியோர்கள் அனுக்ரஹம் பெறவும்.

க்ரஹப்ரீதி

பவித்ரம் போட்டுககொண்டு ப்ராணாயாமம் பண்ணி,

"ஸ்ரீபகவதாஜ்ஞயா .... ம்

**பீஜதான முஹூர்த்த லக்னாபேக்ஷயா, ஆதித்யானாம் நவானாம் க்ரஹாணாம் சுபம் ஆனுகூல்ய ஸித்யர்த்தம் யே யே கிரஹா: சுப ஸ்தாநேஷு ஸ்திதா: தேஷாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்தியர்த்தம், யே யே க்ரஹா: சுப இதர ஸ்த்தானேஷு ஸ்திதாஸ்ச தேஷாம் கிரஹாணாம் அந்த்யந்த அதிசயித சுபபல ப்ரதாத்ருத்வ ஆதித்யாதி நவக்ரஹ தேவதா ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யர்த்தம் யத்கிஞ்சித் ஹிரண்யதானம், கரிஷ்யே".**

**தாம்பாளத்தில் வெற்றிலை பாக்கு தக்ஷிணை. சோபனாக்ஷதை, புஷ்பம், (கொஞ்சம் தீர்த்தம், பத்னியைக் கொண்டு சேர்க்கச் சொல்லி) "ஹிரண்யகர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபீஜம் விபாவஸோ: அனந்த புண்ய பலதம் அதஶ்சாந்திம் ப்ரயச்சமே, பீஜதான முஹூர்த்த லக்னாபேக்ஷயா, ஆதித்யானாம் நவானாம் க்ரஹாணாம் சுபம் ஆனுகூல்ய ஸித்யர்த்தம் யே யே கிரஹா: சுப ஸ்தாநேஷு ஸ்திதா: தேஷாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்ய ஸித்தியர்த்தம், யே யே க்ரஹா: சுப இதர ஸ்த்தானேஷு ஸ்திதாஸ்ச தேஷாம் கிரஹாணாம் அந்த்யந்த அதிசயித சுபபல ப்ரதாத்ருத்வ ஆதித்யாதி நவக்ரஹ தேவதா ப்ரீதி த்வாரா பகவத் ப்ரீத்யர்த்தம் யத்கிஞ்சித் இதம் ஹிரண்யம் ஸ்ரீவைஷ்ணவவாய துப்யம் அஹம் ஸம்ப்ரததே நம: நமம அச்சுத: ப்ரியதாம்" என்று பணத்தையும் ஜலத்தையும பூமியல் சேர்த்து**

**பிறகு மேற்படி பணத்தையும் வெற்றிலை பாக்குடன் வாத்யாருக்கு அல்லது ஒரு ஸ்ரீ வைஷ்ணவருக்கு கொடுக்கவும்.**

நெல்லு, வெற்றிலை பாக்கு, தக்ஷிணை எல்லாம் தாம்பாளத்தில் எடுத்துக்கொண்டு,

"தன்யம் கரோஷி தாதாரம் இஹலோகே பரத்ருச ப்ராணீநாம் ஜீவனம் தான்யம் அதச்சாந்திம் ப்ரயச்சமே,

ஹிரண்ய கர்ப்ப கர்ப்பஸ்தம் ஹேமபூஜம் விபாவஸோ: அனந்த புண்ய பலதம் அதச்சாந்திம் ப்ரயச்சமே

நக்ஷத்ரே ராசௌ ஜாதஸ்ய (பெண் குழந்தையாக இருந்தால் ஜாதாயா:, மம என்று சொல்லச் சொல்லி) சிசோ: தந்மாதா பித்ரோச்ச மாதுலஸ்ய மாதாமஹாதீனாம்ச க்ஷேம ஸ்தைர்ய, வீர்ய விஜய, ஆயுராரோக்ய அபிவ்ருத்யர்த்தம் ஸர்வாரிஷ்ட சாந்தியர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்யர்த்தம் ஸமஸ்த ரோகபீடா பரிஹாரார்த்தம் சதாயு: ஸம்பூர்ணதா ஸித்யார்த்தம் வேதோக்த ஆயுர்அபிவிருத்தியர்த்தம் யத்கிஞ்சித் ஹிரண்ய ஸஹித இமாநி பீஜாநி, நாநாகோத்ரேப்ய: ஸ்ரீ வைஷ்ணவேப்ய: தேப்ய: தேப்ய: ஸமப்ரததே நம: நமம அச்சுத ப்ரியதாம்",

என்று சொல்ல - நெல்லில் பணத்தைப் கோட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் மற்றும் உள்ளவர்களுக்கும் விநியோகம் பண்ண வேண்டியது.

மேல் உத்திரியத்தில் மேற்படி தான்யம்வாங்கி பூமியில் நெல்லையும் பணத்தையும் விளையக்கூடிய பூமியில் கொண்டுபோய் சோத்து, பணத்தை தேடி எடுக்கிற ஸம்பிரதாயம். (இதனால் விரை நெல் நன்கு பரவி விதைக்கப்படும். நிறைய நெற்கள் முளைப்பதால் நிறைய ஆன்மாக்கள் தோன்றவும், ஒரு விரை நூறாகப் பெருகி நிறைய பேருக்கு அன்ன ஸம்ருத்தியை ஏற்படுத்தவும் காரணமாக இருப்பதால், அந்த குழந்தைக்கு இதன் பொருட்டு நிறைய புண்ணியம் உண்டாகி நீண்ட ஆயுளுடன் க்ஷேமமாக இருக்கும் என்பது நம்பிக்கை).



பிறகு, பிள்ளைக்கு மாமனார் மாமியாரைக் கூப்பிட்டு அவர்கள் கொண்டு வந்திருக்கும் சீர சாமான்களை "ஆசாஸ்தேயம் யஜமாநோசௌ ..." என்கிற பஞ்சாதி சொல்லி ஆசீர்வாதம் செய்து, அதைப் பெற்றுக்கொண்டு தன் தாயார் தகப்பனார் அல்லது ஆத்துக்குப்பெரியவாளிடம் ஸமர்ப்பித்து அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று, புதிது உடுத்திக்கொண்டு வரச்சொல்லவேணும்.

இதற்குள் ஸதஸ்ஸுக்கு சந்தனம், சர்கரை எடுக்கவேண்டும்.

பிள்ளையும் பெண்ணும், குழந்தையும் படிக்கு வந்ததும், எல்லோருக்கும் அக்ஷதை கொடுத்து "அஸ்மே தேவா" அல்லது "ஆயுஷ்மந்தம்"

பஞ்சாதி சொல்லி

கடைசியில் "ரோஜநோ ரோஜமாந சோபந: சோபமாந கல்யாண.

ஸ்வாமிந: ஸ்வஸ்தி மந்த்ரார்தா: ஸத்யா: ஸபலாஸ்வந்திதி பவந்தோ மஹாந்தோ அநுக்ருஹ்ணந்து"

அநயோர் தம்பத்யோ: ஸகுடும்பஸ்யசா வேதோக்தம் தீர்கமாயுஷ்யம் பூயாதிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"பீஜதாந முஹூர்த்தஸ் ஸுமுஹூர்தோஸ்துவிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"தல் லக்நாபேக்ஷயா ஆதித்யாதிநாம் நவநாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்யம் பூயாதிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"யே யே கிரஹா: சுப ஸ்தாநேஷு ஸ்திதா: தேஷாம் க்ரஹாணாம் சுபம் ஆநுகூல்யம் பூயாதிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"யே யே க்ரஹா: சுப இதர ஸஞ்தாநேஷு ஸ்திதாஸ்ச தேஷாம் கிரஹாணாம் அந்த்யந்த அதிசயித சுபபல ப்ரதாத்ருத்வ ஸ ித்திரஸ்திவிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"ஸ்ரீமதாம் தத்ரபவதாம் மஹதாம் பூசுராணாம் ஸ்ரீமத் பாதாரவிந்த த்வம்தமூலே க்ருத ப்ரணாமௌ க்ருதாஞ்ஜலிபுடா இமௌ தம்பதி பஹு ஜீவத்ஸு புத்ரவந்தௌ பஹுபாக்யவந்தௌ தநதாந்ய ஸம்ருத்திமந்தௌ பூயாஸ்தாமிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

---

"அஸ்மிந் யஜமாநஸ்ய க்ருஹே மாஸி மாஸி சோபந பரம்பராவாப்திஸ்ச கல்யாண பரம்பராவாப்திஸ்ச பூயாஸ்தாமிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"பகவத் பாகவத கைங்கர்ய உபயுக்த நித்யநிரவதி தநதாந்ய ஸம்ருத்திரஸ்த்விதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"ஸர்வேஷாம் பகவத் பாகவத ஆசார்யாணாம் விசேஷ அநுக்ரஹ ப்ரஸாஸித்திரஸ்திவிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து"

"ஸர்வே ஜநா: ஸுகிநோ பவந்து"

"ஸமஸ்தஸந்மங்களாநி ஸந்து"

"உத்தரோத்தராபிவ்ருத்திரஸ்து"

"ஸகலகல்யாண ஸம்ருத்திரஸ்து"

படியில் நிற்கும் குழந்தைக்குத் தகப்பனை சொல்லச் சொல்லவும்

"ஹரி: ஓம் - நம:ஸதஸே பதயே நம:ஸகீநாம் — நம: ப்ருதிவ்யை. ஹரி:ஓம்" என்று படியில் பத்நியுடன் ஸேவிக்கச்சொல்லி அனைவரையும் அக்ஷதை சேர்க்கச்சொல்றது.

ப்ரஸவ புண்யாஹம் குழந்தையுடைய தகப்பன் ஆத்தில் நடக்கவேண்டிய விஷயம். ஆனால் தாய்வீட்டுக்கு ப்ரஸவத்திற்கு பெண் போய்விடுவதால் இது பெண் வீட்டில் நடக்கும். எனவே புண்யாஹ செலவுக்கான தொகை முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ பெண்ணின் தகப்பனார் தாயாருக்கு சந்தனம், குங்குமம், சர்கரை கொடுத்து வெத்திலை பாக்கில் வைத்து எதிர் ஸம்பாவனைபோல் கொடுக்கவேண்டியது.



ஸபைக்குத் தாம்பூலம் தக்ஷிணை ஸமர்ப்பிவித்து, ப்ருஹஸ்பதி ஸம்பாவனை செய்து மஞ்சள் நீர் ஆலத்தியெடுத்து படி களையவேண்டியது, ஆசமனம் பவித்திரம் முடிச்சு அவிழ்த்து ஆசமனம் செய்து பெரியோர்களை ஸேவிக்கிறது வழக்கம்.

ப்ரஸவித்த ஸ்த்ரிக்கு புருஷ குழந்தையானால் 21 நாளிலும் பெண்குழந்தை ஆனால் 22 நாளிலும் பஞ்ச கவ்யம் சேர்த்து கொடுக்கிறது. புருஷப்ரஜைக்கு 20வது நாளிலும், ஸ்த்ரீ ப்ரஜைக்கு 40 நாளிலும் பஞ்சகவ்யம் சேர்த்து கொடுத்து பெருமாளுக்கு திருவாராதனம் செய்து, பெருமாள் தீர்த்தம் ஆசாரியன் பாதுகை அல்லது பெரியோர்கள் ஸ்ரீபாத தீர்த்தம் சேர்த்து கொடுத்து, பாண்ட ஸ்பாசம் (சட்டி தொடுகிறது) செய்கிறது பெரியோர்கள் சம்பிரதாயம். அதுவரையில் அவர்கள் தளிகைசெய்யக்கூடாது. பிறர்களுக்கு எதுவும் கொடுக்கக்கூடாது. அவர்களுக்கு (குழந்தை பெற்றவளுக்கு மட்டும்) மேற்படி காலம் வரையில் ப்ரஸவ தீட்டு உண்டு.

லௌகீகம் :- ப்ரஸவ புண்யாஹம் அனைத்தும் முடிந்தவுடன் நேரம் நன்றாக இருந்தால் அப்போதேவோ அல்லது அன்று மாலையிலோ சதுரமாக நெல்லை பரப்பி, அதில் ஒரு மஞ்சள் கயிற்றை வடக்குத் தெற்காக சேர்த்து குழந்தையை (டிரஸ் எதுவுமின்றி) அந்த கயிறு இருக்கும் இடத்தில் இடுப்பு வரும்படி தலையை கிழக்கில் வைத்து மல்லாக்க விடவேண்டும். தகப்பனார் அல்லது மாமன் அந்த மஞ்சள் கயிற்றை இடுப்பைச் சுற்றி குழந்தைக்குக் கட்டவேண்டும்.



பின்னர் மாமா அல்லது தகப்பன் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு மஞ்சள் கொம்பினால் குழந்தையின் பெயரை நெல்லில் எழுதி அந்த பெயரை குழந்தையின் வலது காதில் மெதுவாகச் சொல்லவேண்டும்.

அப்போதேவோ வேறு ஸமயத்திலோ அலங்கரிக்கப்பட்ட தொட்டிலில் குழந்தையை தலையை கிழக்கே வைத்து விட்டு அத்தை அல்லது சுமங்கலி குழந்தையின் கைகளில் வேப்பம் காப்பு, கருகக்காப்பு, வெள்ளி, தங்க வளையல்களையும் இடுவார்கள்.

சுபமஸ்து.